# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:92 **தேதி**:-18.01.2016

**GPF முன் பணம் மற்றும் சில மத்திய சங்க செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

இந்திய நாடு முழுவதும் டிசம்பர், 2015ல் யாருக்கும் GPF பட்டுவாடா நடைபெற வில்லை. சென்னை மற்றும் தமிழகத்தின் பல மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தை பார்வையிட வந்திருந்த BSNL CMDயிடம் நாம் வைத்த கோரிக்கையின் காரணமாகவும், நமது மத்திய சங்கம் டெல்லியில் தலையிட்டதின் காரணமாகவும் தமிழகம் மற்றும் சென்னையில் மட்டும் கடந்த மாதம் GPF பட்டுவாடா நடைபெற்றது. இந்த ஜனவரி மாதத்தில் இது வரை GPF பட்டுவாடா நடைபெற வில்லை. இது ஊழியர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஊழியர்கள் தாங்கள் சம்பளத்திலிருந்து செலுத்திய பணத்திலிருந்து தான் GPF முன்பணம் கேட்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஊழியர்களிடம் இருந்து பிடிக்கப்படும் GPF பணம் ஒருநாள் கூட காலதாமதமின்றி DOTயிடம் வழங்கப்பட்டு விடுகின்றது. அந்த பணத்தை BSNL ஒரு நாள் கூட வைத்திருக்க முடியாது. தனது ஊழியர்கள் கேட்கும் GPF முன்பணத்தை BSNL நிர்வாகம் அவர்களுக்கு வழங்கி விட்டு பின்னர்தான் DOTயிடம் இருந்து வாங்கிக் கொள்கிறது. அவ்வாறு BSNL நிறுவனம் கொடுக்கும் பணத்தை DOT முறையாக திருப்பித் தருவதில்லை. இவ்வாறாக DOT, BSNLக்கு தரவேண்டிய பணம் சுமார் 500 கோடியிலிருந்து 1,000 கோடி ரூபாய் வரை இருந்து வருகிறது. தற்போது நிதி நெருக்கடியில் BSNL நிறுவனம் இருப்பதால் GPF முன்பணம் தர இயலவில்லை. இதற்காக வங்கியிலிருந்து 9.5% வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாக நிர்வாக தரப்பில் கூறப்படுகிறது. இது தொடர்பாக நமது மத்திய சங்கம் DOTயில் உள்ள MEMBER(Finance) மற்றும் BSNLல் உள்ள DIRECTOR(HR) மற்றும் CMD BSNL உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடம் நமது மத்திய சங்கம் தொடர்ந்து விவாதித்து வந்துள்ளது. இது தொடர்பாக 15.01.2016 அன்று நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மீண்டும் CMD BSNLஐ சந்தித்து விவாதித்து உள்ளார். அவர் வரும் வாரத்தில் GPF முன்பணம் தருவதற்கான நிதியினை ஏற்பாடு செய்வதாக தெரிவித்துள்ளார்.

**SC/ST ஊழியர்களுக்கான இட ஒதுக்கீட்டில்:-** SC/ST இட ஒதுக்கீட்டில் DOP&T உத்தரவுகள் அமுலாக்கப்பட வேண்டும் என்கின்ற BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கையினை பரிசீலிக்க அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையினை DIRECTOR(HR) அவர்களிடம் வழங்கி விட்டதாக GM(Rectt) திரு D.சக்கரவர்த்தி நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களிடம் தெரிவித்தார். இலாகா தேர்வுகளில் SC/ST ஊழியர்களுக்கு தகுதி காண் தரத்தில் மேலும் தளர்வு அளிக்க வேண்டும் என பரிந்துரைத்ததாகவும் அவர் தெரிவித்தார். இந்தக் குழு பரிந்துரைத்த தளர்வுகள் முன்தேதியிட்டு அமுல்படுத்தப்பட வேண்டும் என்று நமது பொதுச் செயலாளர் வற்புறுத்தி உள்ளார். இந்த பிரச்சனையை BSNL ஊழியர் சங்கம் DIRECTOR(HR) மற்றும் CMD BSNL ஆகியோரிடமும் விவாதிக்க உள்ளது.

**JTO LICE தேர்வில் கூடுதல் மதிப்பெண்கள்:-** மேலும் 02.06.2013 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வில் மாநில அளவில் EXPERT COMMITTEEகள் தவறான கேள்விகளுக்கு மதிப்பெண்கள் அளித்ததை மறு பரிசீலனை செய்து தேவையான கூடுதல் மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த பிர்சானையில் தேவையான அறிவுறுத்தல்களை வழங்க GM(Rectt) உறுதி அளித்துள்ளார்.

**ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடனான உடன்பாடு:-** BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 13.01.2016 அன்று BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை சந்தித்து ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடன் BSNL நிறுவனம் INFRASTRUCTURE SHARING செய்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பாக விவாதித்தார். ஆனால் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடன் INFRASTRUCTURE SHARING உடன்பாடு ஏதும் நடைபெற வில்லையென்று BSNL CMD தெரிவித்தார். இதர தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதை போன்று ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்கும் POI (POINT OF INTERCONNECTIVITY)யும், 100, 101 போன்ற LEVEL 1 சேவைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரையை பரிசீலிக்க குழு அமைப்பு:-** 47 லட்சம் மத்திய அரசு ஊழியர்களுக்கும், 52 லட்சம் ஓய்வூதியதாரர்களுக்கும் ஊதிய மாற்றம் செய்ய அமைக்கப்பட்ட 7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை பரிசீலிப்பதற்காக அமைச்சரவை செயலாளர் திரு P.K.சின்ஹா தலைமையில் உயர்மட்டக்குழுவினை மத்திய அரசு நியமிக்க முடிவு செய்துள்ளது. இந்த தகவலை பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வெங்கய்யா நாயுடு தெரிவித்தார்.

**நேரடியாக TM ஆக நியமிக்கப்பட்ட TSMகளுக்கு ஜனாதிபத்திய உத்தரவு:-** 14.05.2015ல் நடைபெற்ற தேசியக் கவுன்சில் கூட்டத்தில் நேரடியாக TM களாக நியமிக்கப்பட்ட TSMகளுக்கு ஜனாதிபத்திய உத்தரவு வழங்க வேண்டும் என விவாதிக்கப்பட்டது. இந்த பிரச்சனையை DOTக்கு பரிந்துரைத்து அனுப்ப BSNL கார்ப்பரேட் அலுவலகம் மநிலங்களில் இருந்து விவரங்களை கேட்டிருந்தது. பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் பல மாநிலங்களில் இருந்து இன்னமும் பதில் அனுப்பப்படவில்லை. எனவே மீண்டும் நினைவூட்டல் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு தேர்தல்:-** கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்ட அட்டவணையின் படி 7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு தேர்தலுக்கான மனுக்களை கோருவதற்கான கடிதம் 14.01.2016 அன்று வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் நிர்வாகம் அன்றைய தினம் அந்தக் கடிதத்தை வெளியிடவில்லை. இந்த பிரச்சனையை PGM(SR) திரு ஷமீம் அக்தரிடம் நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் விவாதித்த போது ஒரு சில தினங்களில் இந்தக் கடிதம் வெளியிடப்படும் என்று பதிலளித்துள்ளார்.

**அனைவருக்கும் CONFIRMATION உத்தரவு:-** BSNLஆக மாறிய பின்னர் ஊழியர்களுக்கு CONFIRMATION தரவேண்டுமா என்கின்ற கேள்வி பல இடங்களில் எழுப்பப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மாதிரியான நடைமுறை பின்பற்றப்படுகிறது. எனவே 01.10.2000க்கு முன்பும், பின்பும் பணியமர்த்தப்பட்ட அனைவருக்கும் சட்ட விதிகளின்

படி CONFIRMATION உத்தரவு தரவேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு வெளியிட்டுள்ளது.

**JAO தேர்வு விதிகளில் CLARIFICATION:-** JAO தேர்வுக்கான புதிய தேர்வு விதிகளில் GR.C என்று இருப்பதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என சந்தேகம் இருந்தது. இதற்கு 9020-17,430 ஊதிய விகிதமோ அல்லது அதற்கு மேம்பட்ட ஊதிய விகிதத்தில் ஐந்து ஆண்டு காலத்திற்கு மேல் பணியாற்றும் BSNL ஊழியர்கள் தகுதியானவர்கள் என்ற விளக்கத்தை கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

**இடைக்கால PLI கேட்டு CMD BSNLஐ சந்திப்பு:-** 15.01.2016 அன்று BSNL CMDஐ சந்தித்த நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் இடைக்கால PLI வழங்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தி உள்ளார். ஊழியர்களின் கடுமையான முயற்சியின் காரணமாக புதிய இணைப்புகளை பெறுவதில் ஊழியர்களின் கடும் முயற்சி காரணமாக நிறுவனத்தின் செயல்பாடுகள் அதிகரித்துள்ள சூழலில் இடைக்கால PLI தொடர்பாக BSNL நிர்வாகம் கவனிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். டிசம்பர், 2015ல் நாடு முழுவதும் 17.5 லட்சம் மொபைல் இணைப்புகளை BSNL வழங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பாக பரிசீலிப்பதாக CMD BSNL தெரிவித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்**